


Metro லீடர்
மெட்ரோ
LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'




லீடர்: 05 இதழ்: 290 01.03.2025 பக்கங்கள்:09 editorml21@gmail.com விலை:75/-

# பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும்!



- இனவாதம் தலைதூக்க அரசாங்கம் அனுமதிக்காது
- ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அறிவிப்பு

சட்டபூர்வமான அரசின் கீழால் செயற்படும் குற்றவியல் அரசை,தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முடிவுக்குக் கொண்டுவரும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.


வரலாற்றில் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இனவாதம் மற்றும் அடிப்படைவாதம் அமைந்திருந்தது என்றும், இலங்கையில் மீண்டும் இனவாதம் மற்றும் அடிப்படைவாதம் தலைதூக்க தற்போதைய அரசாங்கம் அனுமதிக்காது என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

02

## ஈஸ்டர் தாக்குதல் குறித்து மல்கம் ரஞ்சித் காதில் வாங்கிக் கொள்ளவில்லை - ஞானசார தேரர் குற்றச்சாட்டு



02



## புனித ரமழான் நோன்பு நாளை ஆரம்பம்

02

## நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு இல்லை



02



சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் பொருளாளர் ஏ.ஏ.சலீமினால் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நம்பிக்கையாளர் சபை தலைவர் டாக்டர் எம். எச். கே. சனூஸ் காரியப்பர், செயலாளர் எந்திரி எம்.எம்.எம். முனாஸ் உள்ளிட்டவர்களிடம் பள்ளிவாசல் ஆவணங்கள் உத்தியோகபூர்வமாக (28) வெள்ளிக்கிழமை பிரதேச செயலக உத்தியோத்தர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலக கலாச்சார உத்தியோகத்தர்கள், உலமாக்கள் முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டன.

## பயங்கரவாதத்...

புதிய சட்டக் கட்டமைப்பின் மூலம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பாராளுமன்றத்தில் நேற்று (28) நடைபெற்ற 2025 வரவுசெலவுத் திட்டத்தின் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சின் செலவினங்கள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடி மற்றும் நாட்டில் பாதுகாப்பு இல்லை என்ற எண்ணத்தை உருவாக்குவதன் மூலமோ, பொதுமக்கள் கிளர்ச்சியை உருவாக்குவதன் மூலமோ, அரசாங்கத்தை கவிழ்க்க எதிர்க்கட்சிகள் காணும் கனவுக்கு ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

தற்போதைய அரசாங்கம் காட்டுமிராண்டித்தனத்தின் சகாப்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, நாகரிகத்திற்கு வழி வகுத்துள்ளது என்றும், முடிந்தால் தற்போதைய அரசாங்கத்தின் நாகரிகத்தை மிஞ்சிச் செல்லுமாறும் எதிர்க்கட்சிகளுக்கு ஜனாதிபதி சவால் விடுத்தார்.

அவ்வாறு இல்லாமல் பழைய அரசியலிலே இருந்தால் அரசியலை விட்டு விலகுவதை தடுக்க முடியாதெனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

பாதாள உலகின் குற்ற குழுக்களுக்கு தற்போதைய அரசாங்கத்தின் எந்தவொரு உறுப்பினரினதும் ஆசிர்வாதம் கிடைக்காதெனவும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

இலங்கை இராணுவத்தையும் பொலிஸையும் தொழில்சார்புடைய இராணுவமாகவும் பொலிஸாகவும் மாற்றுவதாக உறுதியளித்த ஜனாதிபதி, பாதுகாப்பு துறையின் எந்தவொரு இடமாற்றத்தையும் நட்பு மற்றும் அரசியல் அடிப்படையில் செய்யப்போவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

முன்னாள் பாதுகாப்பு படைகளின் பிரதானிக்கு ஏழு தடவைகள் சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருப்பதாகவும், சகாக்களுக்கும் நண்பர்களுக்கும் நியமனங்களை வழங்குவதால் புதிய பயணத்தை செல்ல முடியாது என்பதால் புதியவர்களுக்கு நியமனங்கள் வழங்கியிருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நபரொருவருக்கு பக்கச் சார்பான இராணுவத்திற்கு பதிலாக நாட்டுக்கு சார்பான இராணுவம் ஒன்றை உருவாக்கவும் தொழில்சார்பு தன்மையை மேம்படுத்தவும் தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

காலத்தால் மறைந்திருக்கும் குற்றச் செயல்களுக்கு நீதி மற்றும் நியாயத்தை வழங்க தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் எனவும், அதற்காக எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் தற்போதைய அரசாங்கம் எடுக்குமெனவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

பாதுகாப்பு துறையின் கட்மைப்பின் மீதான நம்பிக்கையின் அடிப்படையிலேயே ஒழுக்கம் கட்டியெழுப்பப்படும் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, ஒழுக்கயீனத்தின் பாதாளம் வரையில் சென்றுள்ள இந்த நாட்டை மீண்டும் ஒழுக்கத்தை நோக்கி கொண்டு செல்ல தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தி அதிகாரத்தை பெற்றுக்கொள்ளும் எதிர்க்கட்சியின் கனவு தற்போது முற்றுப்பெற்றுள்ளதென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தேசிய பாதுகாப்பு தொடர்பில் நெருக்கடியிருப்பதாக காண்பித்து ஆட்சி அதிகாரத்தை பெற்றுக்கொள்ளும் முயற்சியில் எதிர்கட்சி தற்போது இருக்கின்றதா என்ற சந்தேகம் எழுவதாகவும் கூறினார்.

இம்மாதத்தில் நடந்த ஐந்து குற்றச் செயல்களை விசாரணை செய்யும்போது ஐந்து குழுக்களினால் அந்த குற்றச் செயல்கள் செய்யப்பட்டுள்ளதெனவும், விசாரணைகள் முன்னெடுக்கப்படும் போது தமது பக்கம் விசாரணைகள் வருவதை குற்றச் செயல்களை செய்வோர் அறிந்துகொள்வதாகவும், அவ்வாறு பல குற்றக் குழுக்கள் ஒரே சமயத்தில் இயங்குவது சூழ்ச்சியாக இருக்குமா என்ற சந்தேகம் எழுவதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இந்த சூழ்ச்சியை அறிந்துகொண்டு அதனை முடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

அதேபோல் சூழ்ச்சிகளால் ஆட்சி மாற்றம் செய்த காலம் முடிந்துவிட்டதாகவும், ஒழுக்கத்தினால் அரசாங்கமொன்றை கட்டியெழுப்ப முடியுமெனவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சுட்டிக்காட்டினார்.

அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரசியல் அதிகார தரப்பை குற்ற குழுக்கள் அற்றதாக்கும் சமூகத்தை கட்டியெழுப்புவதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

பாதுகாப்பு துறையினரின் வெளிநாட்டு பயிற்சிகளுக்கான கொடுப்பனவுகளை அதிகரிக்க இம்முறை வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

விமானப்படை மற்றும் கடற்படைக்கு அவசியமான ஊர்திகளை கொள்வனவு செய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும், பொலிஸ் திணைக்களத்தின் வசதிகளை மேம்படுத்த 1000 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கீடு செய்திருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும், விமானப்டைக்கும் பொலிஸுக்கும் தலா 10,000 பேரை ஆட்சேர்ப்பு செய்ய இம்முறை வரவு செலவு திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

## ஈஸ்டர் தாக்குதல்...

சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட சில நாட்களுக்குப் பிறகு, பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசாரர், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் குறித்து கார்டினல் மால்கம் ரஞ்சித்திடம் முன்கூட்டியே தெரிவித்ததாகவும், ஆனால் அவர் அதனை காதில் வாங்கிக் கொள்ளவில்லை என்றும் கூறியதன் மூலம் மற்றொரு சர்ச்சைக்கு களம் அமைத்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஞானசார தேரர், அரசாங்க புலனாய்வு சேவைகளுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் தாக்குதல் குறித்து முன்கூட்டியே தகவல் இருந்ததாகக் கூறினார்.

தாக்குதலுக்கு முன்பே நாங்கள் கார்டினலை அணுகி, அவருடன் நீண்ட நேரம் விவாதித்தோம், சாத்தியமான அச்சுறுத்தல் குறித்து எச்சரித்தோம். இருப்பினும், அவர் எங்கள் எச்சரிக்கைகளைப் புறக்கணித்தார், என்று அவர் குற்றம் சாட்டினார்.

பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் என்ற முறையில், தாக்குதல் குறித்து சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்குத் தெரிவிக்க எங்களுக்கு அதிகாரம் இருந்தது, ஆனால் நாட்டின் பாதுகாப்புப் படைகளைக் கட்டுப்படுத்த எங்களுக்கு அதிகாரம் இல்லை. புலனாய்வு சேவைகளால் கூட அணுக முடியாத பல இரகசிய தகவல்களை நாங்கள் பெற்றுள்ளோம், என்று ஞானசாரா கூறினார்.

இந்தத் தாக்குதல் குறித்து 2014 முதல் நான் எச்சரித்து வந்தேன். அந்த நேரத்தில் அந்தந்த அரசாங்கத் தலைவர்களுக்கு 17 கடிதங்களை அனுப்பினேன். நாட்டில் வேறு பல தீவிரவாதக் குழுக்கள் தோன்றுவது குறித்தும் நான் கவலைகளை எழுப்பினேன், என்று அவர் கூறினார்.

## பிறை தென்படவில்லை...

ஹிஜ்ரி 1446 புனித ரமழான் மாதத்திற்கான தலைப்பிறை நாட்டில் எங்கும் தென்படாததன் காரணமாக, ரமழான் நோன்பு நாளை மார்ச் 02 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பெரிய பள்ளிவாசலில் வெள்ளிக்கிழமை (28) மாலை மஃரிப் தொழுகையை அடுத்து, கூடிய பிறைக்குழு மாநாட்டில் இம்முடிவு ஏகமனதாக எடுக்கப்பட்டுள்ளது.

## நாட்டில் எரிபொருள்...

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு இல்லை என்றும், எரிபொருள் போக்குவரத்து வழக்கம் போல் நடைபெற்று வருவதாகவும் இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பதற்றமடைய வேண்டாம் என கேட்டுக்கொள்வதாகவும் எரிபொருள் விநியோகஸ்தர்கள் எரிபொருள் ஓர்டர்களை நிறுத்துவதாக எந்த உறுதிப்படுத்தலையும் இதுவரை தெரிவிக்கவில்லை என இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மலையக ரயில் சேவைகள் பாதிப்பு



மரம் மற்றும் பாறை சரிந்துள்ளதால் மலையக ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி இங்குருஓயா மற்றும் கலபொட இடையே ரயில் பாதையில் மரம் ஒன்று முறிந்து விழுந்ததாலும், ஹாலிஎல மற்றும் பதுளை இடையே பாறை சரிந்ததாலும் மலையக ரயில்கள் தாமதமாகி உள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

Metro லீடர் மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'

Metro Media Network
502, Main Street, Sainthamaruthu- 14.
Sri Lanka.
Ads: 0779007738
News: 0772539298
Circulation: 0766735454

# இந்தியாவில் பனிச்சரிவில் 57 பேர் சிக்கியுள்ளனர்

இந்தியாவின் உத்தரகண்ட்டில் ஏற்பட்டுள்ள பனிச்சரிவில் 57 தொழிலாளர்கள் சிக்கியுள்ளதோடு அவர்களில் இதுவரை 16 பேர் மாத்திரமே மீட்கப்பட்டுள்ளனர்.

உத்தரகண்ட் மாநிலத்தின் சமோலி மாவட்டத்திலுள்ள மனா என்கிற உயரமான எல்லைக் கிராமத்தில் ஏற்பட்ட பனிச்சரிவில் எல்லைப்புற வீதியமைப்பு பணிகளில் ஈடுபடுகின்ற 57 தொழிலாளர்கள் சிக்கினர். இவர்களில் 16 பேர் மீட்கப்பட்ட நிலையில் மீதமுள்ள 41 பேரை மீட்கும் பணிகள் நடைபெற்று வருகின்றது.

தொழிலாளர்கள் மீட்கப்படுவது குறித்து அம்மாநில முதலமைச்சர் குறிப்பிடுகையில்,

"இதுவரை 16 பேர் மீட்கப்பட்டுள்ளனர். மீதமுள்ளவர்களை மீட்கும் பணி நடைபெற்று வருகின்றது. இந்தோ-திபெத் எல்லைப்பாதுகாப்பு பணியிலுள்ள இராணுவம் மற்றும் பிற துறைகளைச் சேர்ந்தவர்களின் உதவியுடன் மீட்புப் பணி நடைபெற்று வருகின்றது. சிக்கியுள்ள நபர்களை விரைவில் பாதுகாப்பாக மீட்க முயற்சித்து வருகிறோம்" என்றார்.



மோசமான வானிலை குறித்து அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டதால் அனைவரும் எச்சரிக்கையுடன் இருக்கின்றனர்.

இதேவேளை சண்டிகரில் உள்ள பாதுகாப்புத் துறையின் புவித் தகவல் ஆராய்ச்சி நிறுவனம் ( 27) விடுத்த எச்சரிக்கையில் சாமோலி, உத்தர்காசி, ருத்ரபிரயாக், பித்தோராகர், பாகேஷ்வர் ஆகிய மாவட்டங்களில் 2,400 மீட்டருக்கு மேல் உயரமான இடங்களில் 24 மணி நேரத்திற்கு பனிச்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது

## இலங்கையின் பொருளாதார கொள்கை மாற்றம் பெறுமா?

இலங்கைக்கு ஐ.எம்.எப். அமைப்பு தொடர்ந்தும் கடனுதவி வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

இருந்த போதிலும் இலங்கையின் பொருளாதார கொள்கையில் மாற்றம் ஏற்படுத்தப்படும் பட்சத்திலேயே நாட்டின் பொருளாதாரத்தில் அபிவிருத்தி ஏற்படும்.

இதற்காக இலங்கை அரசாங்கம் பொருளாதார கொள்கையை உருவாக்க வேண்டிய தேவை தற்போது இருக்கின்றது ஆனால் அதற்கான அரசியல் இருப்பு இந்த அரசாங்கத்திடம் இருக்கின்றதா? என்பது கேள்வியாகவே இன்னும் இருக்கின்றது. அது மட்டுமல்ல தற்போது சர்வதேச ரீதியாக பலவிதமான குழப்பங்கள் காணப்படுகின்றது அமெரிக்காவில் ஜனாதிபதியுடைய வெற்றிக்கு பின்பு ஒவ்வொரு நாளும் முன் வைத்துக் கொண்டிருப்பதை நாங்கள் காணக்கூடியதாகவுள்ளது. புதிய மாற்றங்கள் வந்திருக்கின்றது உலக நிதி சண்டை உலக பொருட்களுக்கான சந்தை இவைகள் எல்லாவற்றிலும் பெரும் குழப்பம் வருகின்றது.

அமெரிக்கா ஐ.எம்.எப் லிருந்து விலகுமா என்ற ஒரு கேள்வி கூட எழுந்திருக்கும் காலத்தில்தான் இலங்கை தன்னுடைய பொருளாதார கொள்கைகளை மாற்றி அமைக்க வேண்டிய தேவையும் இருக்கிறது.

இந்த அரசாங்கம் தங்களுடைய பொருளாதாரத்தின் திசையை மாற்றி அமைக்க வேண்டிய தேவை இருக்கிறது இங்கு ஒரு பெரும் உணவு நெருக்கடியும் காணப்படுகிறது எங்களுடைய பொருளாதாரத்தை கட்டி எழுப்ப வேண்டும்.

அரசாங்கம் சிந்திக்க வேண்டிய ஒரு தேவை இருக்கின்றது இலங்கை சர்வதேச நிதி சந்தைகளில் ஆதரவு பெறுவது மிகவும் கடினமாக உள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்து வருகின்றனர். ஒவ்வொரு நாட்டினுடைய நிதிநிலைமை பற்றி சிந்திக்க வேண்டிய தருணமாக காணப்படுகின்றது. ஒவ்வொரு நாட்டினதும் நிதி நிலைமை அதிகரிக்கப்பட வேண்டுமானால் இறக்குமதியை குறைத்து உள்ளூரிலே பல உற்பத்திகளை மேற்கொள்வதன் ஊடாகவே இலங்கையின் பொருளாதார கொள்கையில் மாற்றத்தை. ஏற்படுத்த முடியும்.

editorml21@gmail.com

## சுறா மீன் தாக்கி ரஷ்ய பிரஜை பலி

சுறா மீனால் தாக்கப்பட்டு இழுத்துச் செல்லப்பட்ட ரஷ்ய பிரஜை சடலமாக மீட்கப்பட்டார்.



பிலிப்பைன்ஸின் படங்காஸ் மாகாணத்திலுள்ள லுசோன் தீவிற்குச் சுற்றுலா சென்ற ரஷ்ய பயணிகள் 4 பேர் படகில் சென்று அங்குள்ள கடற்பகுதியில் குளித்தபோது திடீரென ஏற்பட்ட ராட்சத அலை அவர்களை அடித்துச்சென்றதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அதே சமயம் மற்றொரு நபரை சுறா மீன் தாக்கி அந்த நபரும் சடலமாக மீட்கப்பட்டார். இதேவேளை ஏனைய இருவரும் படகு மூலம் கரை திரும்பியுள்ளனர்.

## அமெரிக்கா- ரஷ்யாவுக்கிடையே நேரடி விமானத் திட்டம்

அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே மீண்டும் நேரடி விமானப் போக்குவரத்தைத் தொடங்குவது தொடர்பாக துருக்கியில் இரு நாடுகளும் ஆலோசனை நடத்தியுள்ளன.

இது குறித்து ரஷ்யா வெளியுறவுத் துறை அமைச்சரகம் நேற்று (28) வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:




ரஷ்யா மற்றும் அமெரிக்க பிரதிநிதிகள் இடையே துருக்கியின் இஸ்தான்புல் நகரில் இரண்டாவது கட்ட பேச்சுவார்த்தை நடைபெற்றது.

அந்தப் பேச்சுவாத்தை மிகவும் ஆக்கபூர்வமானதாகவும் தொழில்ரீதியிலானதாகவும் இருந்தது. இதுவரை இல்லாத வகையிலான தொழில் நடவடிக்கைகளை இரு தரப்பினரும் பரஸ்பரம் மேற்கொள்வது குறித்து விரிவாக ஆலோசனை நடத்தினர்.

அந்தப் பேச்சுவார்த்தையின் போது, அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே மீண்டும் நேரடி விமானப் போக்குவரத்தைத் தொடங்குவது குறித்து விவாதிக்கப்பட்டது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாகிஸ்தான் மதரஸாவில் குண்டுவெடிப்பு: 5 பேர் பழி

பாகிஸ்தானிலுள்ள மதரஸாவில் நடந்த குண்டுவெடிப்பில் 5 பேர் உயிரிழந்தனர். 10-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணம் அக்கோரா கட்டக் மாவட்டத்தில் தலிபான் நடத்தும் மதரஸா பள்ளி ஒன்று உள்ளது. இந்த மதரஸா வளாகத்தில் மசூதி அமைந்துள்ளது.

இந்த மதரஸாவில் நேற்று வெள்ளிக்கிழமை என்பதால் ஏராளமானோர் வளாகத்தில் கூடியிருந்தனர். இந்நிலையில் பிற்பகல் நேரத்தில் குண்டுவெடிப்பு நடந்தது.

இந்த குண்டுவெடிப்பு தாக்குதலில் மசூதியில் வழிபாடு நடத்திய 5 பேர் உயிரிழந்தனர். மேலும், 10-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதைத் தொடர்ந்து பொலிஸார் விரைந்து சென்று மசூதி வளாகத்தில் விசாரணை நடத்தி வருகின்றனர்.




# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் மற்றும் விவசாய பீடங்களை ஆரம்பியுங்கள்

## பாராளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர்

பாறுக் ஷிஹான்

ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் மிக நீண்ட நாள் தேவையாகவும் கோரிக்கையாகவும் இருந்து வருகின்ற மருத்துவ பீடமொன்றினை அமைப்பதற்காக ஒவ்வொரு அரசாங்கத்திடமும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வந்திருந்தாலும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை எனவும், இந்த அரசாங்கமானது இது விடயம் குறித்து கவனமெடுக்குமாறும் பாராளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் வியாழக்கிழமை பாராளுமன்றில் தெரிவித்தார்.

இந்த வருடத்திற்கான வரவு செலவு திட்ட வாசிப்பின் மீதான விவாதங்களின் போதே பாராளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார், குறித்த வரவு செலவு திட்டத்தில் மிக குறைந்தளவிலான ஒதுக்கீடுகளே கிழக்கு மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள- தெனவும் அதிக தேவைகளை கொண்ட மாகாணமாக கிழக்கு மாகாணம் காணப்படுவதாகவும் பல்வேறு விடயங்களை சுட்டிக்காட்டிப் பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



மேலும் உரையாற்றுகையில், தென்கிழக்கு பல்கலைக்கழகம் அமைந்திருக்கும் பிரதேசமானது விவசாயத்திற்கு பெயர் போன பிரதேசமாக காணப்படுவதனால் இப்பல்கலைக்கழகத்திற்கு விவசாய பீடமொன்றை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் குறித்த வரவு செலவுத் திட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு கிழக்கு மாகாணத்தின் தேவைகளை நிவர்த்திக்கும் வகையில் அதிக ஒதுக்கீடுகளை செய்து தருமாறும் கேட்டுக் கொண்டார்.

# கல்முனையன்ஸ் போரம் தொடர்ந்து ஏழாவது ஆண்டாக முன்னெடுக்கும் ஸஹர் உணவு விநியோகம்

நூருல் ஹுதா உமர்

கல்முனையில் உள்ள அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் நோயாளிகளுடன் தங்கியுள்ளவர்களுக்கும், கல்முனையில் தங்கியுள்ள வெளியூர் பயணிகளுக்கும் ஸஹர் உணவு இலவசமாக வழங்குவதற்கான ஏற்பாடுகளை ஏழாவது ஆண்டாகவும் கல்முனையன்ஸ் போரம் முன்னெடுத்து வருகின்றது. என அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

ஸஹர் உணவு தேவைப்படுபவர்கள் 0777849423 எனும் தொலைபேசி இலக்கத்தை மாலை 05.00 - 07.00 மணிக்குள் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளுமாறும், ஸஹர் நேரத்தில் உங்கள் காலடிக்கே நேரில் வந்து ஸஹர் உணவு வழங்கப்படும், என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளில் நோயாளிகளுடன் தங்கியுள்ளவர்களும், பல்வேறு தேவைகளுக்காக வெளியூர்களில் இருந்து கல்முனைக்கு வருகை தருபவர்களும் ரமழான் மாதத்தில் ஸஹர் உணவை பெற்றுக்கொள்வதில் உள்ள சிக்கல் நிலையை கருத்தில் கொண்டு கல்முனையன்ஸ் போரம் தொடர்ந்து ஏழாவது ஆண்டாக இவ்வேலைத்திட்டத்தினை முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

# சுற்றாடல் கழக முன்னோடி மாணவியினால் வீட்டுத் தோட்ட செய்கையாளர்களுக்கு பயிர்க்கன்றுகள், விதைகள் வழங்கி வைப்பு










எம்.எம்.ஸைபுல் ஹபீஸ்

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையின் சுற்றாடல் கழக முன்னோடி மாணவி செல்வி ஜே.சதுஷயண்யா 2016 ஆம் ஆண்டு தொடக்கம் சுற்றுச் சூழல் தொடர்பாக பச்சை, மஞ்சள், வெள்ளி, தங்க பதக்க செயற்பாடுகளில் ஈடுபட்ட இவர் தற்போது ஜனாதிபதி பதக்க செயற்பாடுகளின் பொருட்டு தனியாள் கருத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றார்.

இதற்கமைய கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பாண்டிருப்பு 01 பி கிராம உத்தியோகத்தர் பிரிவில் வீட்டுத் தோட்டத்தில் ஈடுபடுபவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவை உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இனங்கண்டு அவர்களுக்கான பயிர்க்கன்றுகள் மற்றும் விதைகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது முதற்கட்டமாக அப்பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 10 குடும்பங்களுக்கு மரக்கறி பயிர்க்கன்றுகள், பழமரக் கன்றுகள் மற்றும் விதைகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன. மேலும், இக்குடும்பங்களுக்கு வீட்டுத் தோட்ட செய்கை தொடர்பாக அம்பாறை மாவட்ட சிரேஸ்ட விவசாய போதனாசிரியர் திரு கோகுலராஜ் வளவாளராக கலந்து விளக்கமளித்ததுடன், குறித்த மாணவியினால் வீட்டுத் தோட்ட செய்கை தொடர்பான கையேடும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ், அம்பாரை மாவட்ட சிரேஸ்ட சுற்றாடல் உத்தியோகத்தர் புஸ்பராஜினி உள்ளிட்ட விவசாய திணைக்கள அதிகாரிகள் என மேலும் பலர் கலந்து கொண்டனர்.

இரவது சுற்றாடல் முன்னோடி கழக செயற்பாடுகளுக்கு பெற்றோர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

# பெற்றோர்கள் பிள்ளைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும்

## கல்முனை வலயக் கல்வி பணிப்பாளர்



ஏ.எல்.எம்.ஷினாஸ்

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனை இடம்பெற்று வருகிறது. நாளாந்தம் இவ்வாறான சம்பவங்கள் பதிவாகுவது கல்வித் துறையில் பணியாற்றுவோருக்கு பெரும் சவாலாக மாறியுள்ளது. பெற்றோர்கள் தமது பிள்ளைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹூதுல் நஜீம் தெரிவித்தார்.

மருதமுனை அல் -ஹம்றா வித்தியாலயத்தின் பெற்றோர்கள் ஏற்பாடு செய்து நடாத்திய தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் எம்.எம்.முஹம்மட் நியாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹூதுல் நஜீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார். தொடர்ந்து இங்கு உரையாற்றிய வலயக் கல்விப் பணிப்பாளர், 1978 ஆம் ஆண்டு மருதமுனையை தாக்கிய சூறாவளிக்கு பின்னர் இங்கு ஏற்பட்ட கல்விப்புரட்சி உலகமெல்லாம் மருதமுனை.. மருதமுனை.. என்ற பெயர் பேசப்படுவதற்கு காரணகர்த்தாவாக அமைந்திருந்தது. இந்த கல்விப் புரட்சியை மீள உருவாக்க வேண்டியது காலத்தின் தேவையாக மாறியுள்ளது. இன்று மாணவர்களை கையடக்க தொலைபேசி பாவனை போதை வஸ்து பாவனை போன்றவற்றிலிருந்து மீட்டெடுக்க வேண்டியது கட்டாயமாகும். அதிபர்கள் ஆசிரியர்கள் இவை தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். பெற்றோர்கள் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் தமது பிள்ளைகள் சித்தி அடைய வேண்டும் என்பதற்காக இரவு பகலாக கண்ணுக்குள் வைத்து குறிப்பாக தங்களுடைய இறக்கைகளுக்குள் வைத்து பிள்ளைகளை கண்காணிப்பது போல் தொடர்ந்தும் அவர்களை அவதானிக்க வேண்டும்.

மாணவர்களின் கட்டிளமைப் பருவம் என்பது அவர்களை திசை திருப்பி விடும். கையடக்க தொலைபேசியினால் தம்மை தானே அழித்துக் கொள்ளும் நிலை உருவாகியிருக்கின்றன.

இதில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.றியாஸா கௌரவ அதிதியாக கலந்து கொண்டதுடன், இந்த நிகழ்வில் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் அல்-ஹம்றா வித்யாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் அதிதிகளினால் பரிசு, நினைவுச் சின்னம், மற்றும் சான்றிதழ்கள் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்

# சம்மாந்துறை சட்டத்தரணிகள் சங்க தலைவராக சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஸ்தபா தெரிவு

பாறுக் ஷிஹான்




சம்மாந்துறை சட்டத்தரணிகள் சங்கத்திற்கு புதிய தலைவராக சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஸ்தபா மீண்டும் எவ்வித போட்டிகளுமின்றி ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சம்மாந்துறை சட்டத்தரணிகள் சங்கத்தின் நடப்பாண்டிற்கான பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது மீண்டும் சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஸ்தபா தெரிவானார். மேலும் சம்மாந்துறை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய செயலாளராக சிரேஷ்ட சட்டத்தரணி எம். வை. அன்வர் ஸியாத்தும் பொருளாளராக சட்டத்தரணி எம்.எம்.எ.ஃப். ஷாமிலாவும் உப தலைவராக சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.நஸீலும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த தெரிவு செய்யப்பட்ட சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எம். எம். முஸ்தபா கிழக்கின் பல்வேறு நீதிமன்றங்களுக்கு சென்று வாதாடும் திறமை கொண்டவர் என்பதுடன் கடந்த காலங்களிலும் சம்மாந்துறை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராகவும் பிராந்திய சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராகவும் செயற்பட்டு சட்டத்தரணிகளின் நலன்சார் விடயங்களிலும், சம்மாந்துறை நீதிமன்றம் உருவாகவும் அர்ப்பணிப்புடன் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# "ஏ.எம்.எம்.நௌசாத் பாராளுமன்றத்தில்" எனும் நூல் வெளியீடு விழா

தில்சாத் பர்வீஸ்



"ஏ.எம்.எம்.நௌசாத் பாராளுமன்றத்தில்" எனும் நூல் வெளியீடு விழா முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எம்.எம்.நௌசாத் தலைமையில் புதன்கிழமை சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில் நூல் ஆய்வுரையை வழங்கினார். அத்துடன், நூலின் முதல் பிரதியினை இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முதலாவது உபவேந்தர் பேராசிரியர் எம்.எல்.ஏ. காதர் பெற்றுக் கொண்டார்

இந்நிகழ்வில், தென் கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் தமிழ்த்துறை பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ், சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ். எல்.முஹம்மது ஹனீபா, சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். நௌசாத், மன்னார் மாவட்டத்தின் முன்னாள் அரசாங்க அதிபர் ஐ.எம்.ஹனிபா, கிழக்கு மாகாண முன்னாள் கல்விப்பணிப்பாளர் மன்சூர், பிரதேச சபை செயலாளர் அல்ஹாஜ் எம்.ஏ.கே. முகம்மட், சம்மாந்துறை பிராந்திய நீர்பாசன பொறியியலாளர் ஆர்.வேல் கஜன், மன்னார் பொது வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் அஸாத் எம் ஹனீபா, கல்வியாளர்கள், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டனர்

# முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களுக்கு சுகாதார அபிவிருத்தி ஆலோசனை விழிப்புணர்வு கருத்தரங்கு

எம்.எம்.எஸ்.ஸிஹாப்





அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரிவில் இயங்கி வருகின்ற முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களுக்கு சுகாதார மேம்பாடுதொடர்பான ஆலோசனை வழிகாட்டி விழிப்புணர்வு நிகழ்வு அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.எம். கஸ்பியா வீவி அட்டாளைச்சேனை பிரிவுக்குற்பட்ட முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பொறுப்பதிகாரிகள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

இதன்போது சிறுவர்கள் பாதுகாப்பு தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட்டது.

# திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டம்

எம்.ஏ.முகமட்

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சருமாகிய அருண் ஹேமச்சந்திரா தலைமையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யூ. ஜி. எம். ஹேமந்த குமாரவின் வரவேற்புரையை தொடர்ந்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் ஆரம்பமானது.

கடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும், முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் தொடர்பாகவும் இன்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டன.

வெருகல், வாகரை மாவட்ட எல்லை ஒதுக்கீடு, குச்சவெளி ,கோமரன்கடவல பிரதேச எல்லை ஒதுக்கீடு, தம்பலகாமம் பிரதேசத்தில் கல்வி வலயத்தினை ஸ்தாபிப்பதற்கான யோசனை, பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவில் முதலியார் குள நிலங்களை விடுவித்தல், திருகோணமலை கடற்கரை அபிவிருத்தி, குச்சவெளி, கும்புறுபிட்டி சுற்றுலா அபிவிருத்தி, சுன்னக்காடு பாதுகாப்புப் பகுதி மற்றும் கோமரன்கடவல வனபகுதியை சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்தல், பாதுகாப்பு பிரிவின் கட்டுப்பாட்டில் உள்ள பளிங்கு கடற்கரையை உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயணிகளுக்கு சுற்றுலா தளமாக அறிவித்தல், சூரியபுரம் பகுதியில் யானைவேலி அமைத்தல், சுற்றுலா தள முயற்சியாளர்களுக்கு தொழிற்பாடத்திட்டங்களை அறிமுகம் செய்தல், கடலரிப்பினை தடுப்பதற்கான திட்டங்கள், தேங்காய் தொடர்பான திட்டங்களை ஆரம்பித்தல், கிண்ணியாவில் தொலைத்தொடர்பு கோபுரங்களின் கதிர்வீச்சு காரணமாக புற்று நோய்த்தாக்கங்கள் அதிகமாக ஏற்படுவதை தவிர்த்தல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

மேலும் அரிசி உற்பத்தியில் தன்னிறைவு காணும் பொருட்டாக திருகோணமலை மாவட்டத்தில் 1985 ஆம் ஆண்டுக்கு முன்பு செய்கை பண்ணப்பட்டு கைவிடப்பட்டுள்ள 205 சிறு குளங்களில் ஐம்பதையும், கைவிடப்பட்டுள்ள அணைக்கட்டு 25 இல் ஐந்தையும் இந்த நிதியாண்டில் மறுசீரமைத்து நெற்செய்கை மேற்கொள்ளல், கோணேசர் கோவில் வளாகத்தில் எவரது ஒப்புதலும் இன்றி வீதியின் இருமருங்கிலும் கட்டப்பட்டுள்ள கடைகள், குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் 883 ஏக்கர் நிலம் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்டு நீண்டகாலமாகப் பயன்படுத்தப்படாமல் உள்ளமை, குச்சவெளிப் பிரதேச செயலாளர் பிரிவில் குடிநீர் வழங்கும் திட்டம் இறக்கக்கண்டிக் கிராமத்தோடு நிற்கின்றது. இதை மேலும் தாமதமின்றித் திரியாய் கிராமம் வரைக்கும் கொண்டு செல்லல், வெல்வேரி பகுதியில் அமைந்துள்ள காணிகளை மீளளித்து மீள் குடியேற்றம், திருகோணமலையில் மணல் அகழ்தல் மற்றும் போக்குவரத்தில் ஏற்படும் பிரச்சினைகள், துறைமுக அதிகார சபையிடமிருந்து நிலத்தை விடுவித்தல், வன பாதுகாப்பு திணைக்களத்திடமிருந்து நிலங்களை விடுவித்தல், தொல்பொருள் திணைக்கள இடம் பற்றிய பிரச்சினைகள் போன்ற பல விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இதன்போது கிழக்கு மாகாண பிரதம செயலாளர் டி.ஏ.சி. என். தலங்கம, பாராளுமன்ற உறுப்பினர் ச. குகதாசன், பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப், பாராளுமன்ற உறுப்பினர் அக்மீமன கமகே ரொஷான் பிரியசஞ்சன, கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பிரபல ஊடகவியலாளர் அஸ்ஹர் ஆதம் புனித உம்ராக்கடமையை நிறைவேற்ற சவூதி பயணம்

தில்சாத் பர்வீஸ்



பிரபல ஊடகவியலாளரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் செயற்குழு உறுப்பினரும் திட்டமிடல் சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தருமான கல்முனை அஸ்ஹர் ஆதம் சவூதி அரேபிய மன்னரும் இரு புனித பள்ளிவாயல்களின் சேவகருமான சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல சுஊதின் இரு புனித பள்ளிவாயல்களின் சேவகரின் விருந்தாளிகள் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு புனித உம்ராக்கடமையை நிறைவேற்ற வியாழக்கிழமை சவூதி அரேபியா பயணமானார்.

இத்திட்டத்தின் ஊடாக உலகலாவிய ரீதியில் 70க்கும் மேற்பட்ட நாடுகளிலுள்ள பல்துறை சார்ந்தவர்களுக்கு வருடா வருடம் புனித ஹஜ் மற்றும் உம்ராக்கடமைகளை நிறைவேற்ற சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

சவூதி அரேபியாவின் இலங்கைக்கான தூதுவர் காலித் பின் ஹமூத் அல்கஹ்தானியின் முயற்சியின் பயனாகவும், சிபாரிசுக்கமையவும் இம்முறை புனித உம்ராக்கடமையை நிறைவேற்ற இலங்கையிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள சுமார் 15 பேர் அடங்கிய குழு சவூதி அரேபியா செல்கின்றது.

இக்குழுவில் அண்மையில் இடம் பெற்ற அல்குர்ஆன் போட்டியில் முதல் இடங்களைப் பெற்றுக் கொண்ட வெற்றியாளர்கள் உட்பட ஹாபிழ்கள் உலமாக்கள் இஸ்லாமிய அழைப்புப்பணிகளில் ஈடுபட்டுள்ள தாயீக்கள் அரபுக்கலாசாலையின் விரிவுரையாளர்கள் ஊடகவியலாளர்கள் என பல்துறைசார்ந்தோர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்

# நற்பிட்டிமுனை ஹிஜா கல்லூரியினால் சாதனை மாணவர்கள் பாராட்டி கௌரவிப்பு







எம்.எம்.எஸ்.ஸிஹாப், ஏ.எல்.எம்.ஷினாஸ்

நற்பிட்டிமுனை ஹிஜா கல்லூரி ஏற்பாடு செய்த ஓ.எல் தின நிகழ்வும் மாணவர்களை பாராட்டி கௌரவிக்கின்ற விழாவும் ஹிஜா கல்லூரியின் நிறைவேற்று முகாமைத்துவ பணிப்பாளர் ஆசிரியர், டபிள்யூ. அய்யூப்கான் தலைமையில் நற்பிட்டிமுனை லாபிர் வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் 2024, 2025 ஆகிய ஆண்டுகளில் கல்லூரியில் கல்வி கற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் மற்றும் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் நினைவுச்சின்னம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள். ஹிஜா கல்லூரியில் கல்வி கற்று வரும் இம்முறை ஓ.எல் பரீட்சைக்கு தயாராக உள்ள மாணவர்களுக்கும் இங்கு நினைவுச் சின்னம் வழங்கிய பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.

மாணவர்களுடைய கலை, கலாசார நிகழ்வுகளுடன் இடம்பெற்ற இந்த ஓ.எல் தின விழா நிகழ்வில் அருட் சகோதரர், கிறிஸ்துராஜன் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதியாக கல்முனை வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் வி.தையூப் கலந்து கொண்டார். விசேட அதிதிகளாக நற்பிட்டிமுனை அஸ்ஹர் வித்தியாலயத்தின் உதவி அதிபர் ஏ. எம்.பரீட், லாபீர் வித்தியாலயத்தின் பிரதி அதிபர் திருமதி ஏ.ஜி. தஸ்லிமா, அல் -அக்ஸா வித்தியாலயத்தின் உதவி அதிபர் திருமதி றெஜினா ஷியாம் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு நினைவுச் சின்னங்களை வழங்கி பாராட்டி கௌரவித்தார்கள்.

நிகழ்வின் இறுதியில் பிரதம அதிதி அவருடைய கரத்தினால் ஹிஜா கல்லூ-ரியை சிறப்பாக வழி நடத்தி, மாணவர்களின் காற்றில் கற்பித்தல் செயற்பாட்டிற்கு நீண்ட காலமாக அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்ற முகாமைத்துவ பணிப்பாளர் ஆசிரியரும் விஞ்ஞான பாட பிரபல ஆசிரியருமான ஐ. எம் சூபி ஆகியோர் பொன்னாடை போர்த்தி வாழ்த்து கையளிக்கப்பட்டு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள் நிகழ்வில் அதிதிகளாக கலந்து கொண்டவர்களே ஹிஜாக் கல்லூரி கௌரவத்துடன் பாராட்டி கௌரவித்தது.

இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் மாணவர்களின் பெற்றோர்கள் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்

# சாய்ந்தமருதில் சமுர்த்தி சமுதாயத் தலைவர்கள், உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு












சாய்ந்தமருது பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் மற்றும் சமுர்த்தி சமுதாயத் தலைவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் வெள்ளிக்கிழமை (21) சாய்ந்தமருது வொலிவேரியன் கலாச்சார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் றியாத் ஏ. மஜீத் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் பொறுப்புக்களும் கடமைகளும் எனும் தலைப்பில் பிரதம பேச்சாளராக சாய்ந்தமருது பிரதேச செயலகத் தலைமைப்பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ.ஏ.நஜீம் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வுக்கு கௌரவ அதிதிகளாக சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் எஸ்.றிபாயா, சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஐ.எல்.எஸ்.ஹிதாயா, சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் விடய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப்.றிகாஸா ஷர்பீன், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜ.ஃபர், சமுர்த்தி வலய உதவியாளர் எம்.எஸ்.எம். நௌஷாத், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் கே.எம்.கபீர், உள்ளிட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது 2023ஆம், 2024ஆம் ஆண்களில் சமுர்த்தி அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் சமுர்த்தி சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு அர்ப்பணிப்புடன் கடமையாற்றி சமுர்த்தி முகாமையாளர்களான எஸ்.றிபாயா, ஐ.எல்.எஸ். ஹிதாயா மற்றும் வலய உதவியாளர் எம்.எஸ். எம்.நௌஷாத், சமுர்த்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.எம். ஜாபீர், எம்.எம்.றஸானா, ஜே.எம். றம்ஸா, எம்.ஐ,அன்சார், ஏ.எம்.அபுல் ஹுதா, எம்.எஸ்.நூருல் றிபா, எம். ஆர்.எஸ்.ஷாமிலா, ஏ.எம்.காலிதீன் ஆகியோருக்கு அன்பளிப்புப் பரிசு வழங்கப்பட்டு பாராட்டப்பட்டனர்.

மேலும் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பினை கடந்த காலங்களில் சிறந்த முறையில் வழிநடாத்தி நல்ல பல சமூக நலத்திட்டங்களை மேற்கொண்ட சமுதாயத் தலைவர்களான சிரேஷ்ட ஊடகர் எம்.ஐ.சம்சுதீன், ஏ.எம்.எம். பசீல், இஸட்.எல்.முந்திறான், எஸ். எம்.முபிதா, எம்.ஏ.றஷீட், கே.எம். கபீர், ஏ.எம்.நவாஸ், எம்.ஐ.அலாவுதீன் உள்ளிட்டோருக்கு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்களை தங்குதடையின்றி மேற்கொள்வதற்கும் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் செயற்பாட்டிற்கு ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி வரும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக், தலைமைப்பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ.ஏ.நஜீம் மற்றும் சமுர்த்தி சமூக அபிவிருத்தி பிரிவின் வேலைத்திட்டங்களை சிறப்பாக வழிநடாத்தி 2023 ஆம் ஆண்டு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் தேசிய விருதினைப் பெற்ற சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல். ஜ.ஃபர் உள்ளிட்டோரை சமுதாயத் தலைவர்கள் பொன்னாடை போர்த்தி, நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தனர்.

நிகழ்வின் வரவேற்புரையினை சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் விடய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப்.றிகாஸா ஷர்பீன் நிகழ்த்தியதுடன் நன்றியுரையினை சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல். ஜ.ஃபர் நிகழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து 2025 ஆம் ஆண்டுக்கான பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது

# தியாகியின் மக்கள் நலப்பணி கிழக்கிங்கையில் மீண்டும் ஆரம்பம்








நாடளாவிய ரீதியில் இன, மத வேறுபாடின்றி பல்வேறு மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டு வரும் தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவர் வாமதேவன் தியாகேந்திரனினால் மீண்டும் கிழக்கு மாகாணத்தில் மக்கள் நலப்பணிகள் ஸ்ரீலங்கா மீடியா போரத்தின் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான எம்.ரீ.எம். பாரிஸின் வேண்டுகோளுக்கிணங்க ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதற்கமைவாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டாம் கட்ட மக்கள் நலப்பணியினை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு மீராவோடை பொதுச்சந்தை கட்டிட கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

பொருளாதார ரீதியாக பின்னடைவை எதிர்நோக்கியுள்ள வறிய குடும்பங்கள் மற்றும் மனிதாபிமானமிக்க முச்சக்கர வண்டிச் சாரதிகள், விஷேட தேவையுடையோர்கள் எனப் பலருக்கும் உலருணவுப் பொதிகள், ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கும் நிகழ்வு ஸ்ரீலங்கா மீடியா போரத்தின் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான எம்.ரீ.எம். பாரிஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதுடன், கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் செயலாளர் எச்.ஏ.அமீர், பிரதேச செயலகத்தின் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.ஏ.எம். றியாஸ் உள்ளிட்ட அரச உயரதிகாரிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு தியாகி அறக்கொடை நிதியத்தில் தலைவர் வாமதேவன் தியாகேந்திரனின் இம்மனிதாபிமான உதவிகளை மக்களுக்கு கையளித்தனர்.

ஊடகவியலாளர் எம்.ரீ.எம்.பாரிஸின் வேண்டுகோளுக்கிணங்க கொடைவள்ளல் தியாகி ஐயாவின் சொந்த நிதியுதவியுடன் இப்பணிகள் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது உரையாற்றிய மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன்,

இன, மத வேறுபாடின்றி மக்களுக்கு நல்ல பணிகளை மேற்கொண்டு வருகின்ற வாமதேவன் தியாகேந்திரன் ஐயா போன்ற உயர் எண்ணம் கொண்ட மனிதர்கள் பாராட்டப்படவேண்டியவர், அவரின் மக்கள் நலப்பணிகளுக்கு தனது ஒத்துழைப்புக்களை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றேன்.

இப்பணிகளை நேர்மையாக மக்களுக்கு கொண்டு சேர்ப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வரும் ஊடகவியலாளர் பாரிஸிக்கும் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் எனவும் தெரிவித்தார்.

மேலும், அங்கு உரையாற்றிய ஓட்டமாவடி பிரதேச சபையின் செயலாளர் மற்றும் பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகள் தியாகி ஐயாவின் இம்மகத்தான உதவிக்கு தமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ஸ்ரீமுருகன் தமிழ் வித்தியாலயத்தின் 2025ஆம் ஆண்டுக்கான வருடாந்த இல்ல விளையாட்டு போட்டி




கமு/சது/ஸ்ரீமுருகன் தமிழ் வித்தியாலயத்தின் 2025 ம் ஆண்டுக்கான வருடாந்த இல்ல விளையாட்டு போட்டியின் இறுதிநாள் நிகழ்வு அதிபர் எஸ்.திருச்செல்வம் தலைமையில் இடம்பெற்றது .

இதில் பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனையின் பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார், பிரதிக்கல்வி பணிப்பாளர் பி.பரமதயாளன் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.முஸ்தாக் அலி விவசாய பாட ஆசிரிய ஆலோசகரும் ஸ்ரீமுருகன் தமிழ் வித்தியாலய பாடசாலை மேம்பாட்டுத் திட்ட இணைப்பாளருமான எஸ். மோகன் உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் எம்.வை.ஏ.நாசிர் ஆகியோரும் கலந்து கொண்டனர்

## டெல்லி அணியின் ஆலோசகராக பீட்டர்சன் நியமனம்



18ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் எதிர்வரும் மார்ச் 22ஆம் திகதி ஆரம்பமாகிறது. 10 அணிகள் மோதும் இந்த தொடருக்கு எதிர்பார்ப்பு அதிகரித்து வருகிறது.

ஒவ்வொரு அணியிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதால் போட்டியில் அனல் பறக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. தொடக்க ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் கொல்கத்தா அணியும் பெங்களூர் அணியும் பலப்பரீட்சை கலமிரங்கவுள்ளன.

இந்நிலையில் டெல்லி அணியின் ஆலோசகராக இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் கெவின் பீட்டர்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.

sportsml77@gmail.com
SPORTS லீடர்

# அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இலங்கை மாஸ்டர்ஸ் அணி வெற்றி





கல்முனை அல்- அஸ்ஹர் வித்தியாலயத்தில் இருந்து இவ்வருடம் மெய்வல்லுநர் போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கான சீருடை அறிமுகம் செய்யும் நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ. எச்.அலி அக்பர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரபல வர்த்தகர் எஸ்.எம்.எம். அப்சார் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு சீருடையை அறிமுகம் செய்து வைக்கப்பட்டதையும் அருகில் பாடசாலை பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் உள்ளிட்டோர்களையும் படத்தில் காணலாம்.

(படம்: நிப்ராஸ் லத்தீப்)

சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் 2025 தொடரில் இலங்கை மாஸ்டர்ஸ் அணி மற்றும் அவுஸ்திரேலிய மாஸ்டர்ஸ் அணிகளுக்கு இடையில் இடம்பெற்ற போட்டியில் இலங்கை அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிப் பெற்றுள்ளது.

இந்த போட்டி இந்தியாவின் வதோதராவில் அமைந்துள்ள டீஊயு மைதானத்தில் இடம்பெற்றது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா மாஸ்டர்ஸ் அணி 217 என்ற இமாலய இலக்கை நிர்ணயித்தது. அதன்படி, வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை மாஸ்டர்ஸ் அணி 7 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் போட்டியின் இறுதி ஓவரில் வெற்றி இலக்கை அடைந்தது.

இலங்கை மாஸ்டர்ஸ் அணி சார்பில் உபுல் தரங்க அதிரடியாக துடுப்பெடுத்தாடி 102 ஓட்டங்களைப் பெற்ற



நிலையில், லஹிரு திரிமான்ன 53 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

இறுதி ஓவரில் 2 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், சதுரங்க டி சில்வா ஒரு சிக்ஸரை விளாசி அணியை வெற்றி பெற வைத்தார்.

சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் 2025, பிப்ரவரி 22 அன்று தொடங்கியது. இதில் இந்தியா, இலங்கை, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, மேற்கிந்திய தீவுகள் மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகிய 6 அணிகள் பங்கேற்கின்றன. இலங்கை மாஸ்டர்ஸ் அணியை குமார் சங்கக்கார வழிநடத்துகிறார்.

முதல் போட்டியில் இந்தியாவிடம் தோல்வியடைந்தாலும், அடுத்தடுத்த வெற்றிகளால் அணி புள்ளிப்பட்டியலில் வலுவான இடத்தைப் பிடித்துள்ளது.

இலங்கை மாஸ்டர்ஸ் அணி தனது அடுத்த போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அல்லது இங்கிலாந்து அணிகளுக்கு எதிராக விளையாட உள்ளது. தொடரின் இறுதிப்போட்டி 2025 மார்ச் 16ஆம் திகதியன்று நடைபெறவுள்ளது.

# சாய்ந்தமருது அல்ஹிலால் இல்ல விளையாட்டுப் போட்டி வெற்றிவாகை சூடியது கஸ்மன் இல்லம்







எம்.எஸ்.எம்.ஸாகிர், நூருல் ஹுதா உமர்

சாய்ந்தமருது அல்ஹிலால் பாடசாலையின் 2025 ஆம் ஆண்டுக்கான இல்ல விளையாட்டுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வுகள் சாய்ந்தமருது அல்ஹிலால் பாடசாலையின் அதிபர் யூ.எல்.நஸார் தலைமையில் செவ்வாய்க்கிழமை (25) சாய்ந்தமருது பொலிவேரியன் மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் சிறப்பாக விளையாடியதோடு மட்டுமல்லாமல், இயற்கை முறையில் இல்லத்தையும் அமைத்து முதலாம் இடத்தை தனதாக்கிய கஸ்மன் இல்லம் (பச்சை) 226 புள்ளிகளைப் பெற்று சம்பியன் கிண்ணத்தைப் பெற்று வெற்றி வாகை சூடியது.

இரண்டாமிடத்தை 200 புள்ளிகளைப் பெற்று ரையான் இல்லம் (நீலம்) பெற்றுக் கொண்டதோடு, 191 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடம்தை சலா இல்லம் (மஞ்சள்) பெற்றுக் கொண்டது.

இந் நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். சஹ்துல் நஜீம் பிரதம அதிதியாகவும் அம்பாறை மாவட்ட பொறியியலாளர் ஏ.எம். சாஹிர், பிரதி கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம் ஜாபீர் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் மற்றும் உடற்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எல்.எம். முதர்ரிஸ், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் எம்.ஐ.எம். றியாஸ் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் அத்துடன் பாடசாலையின் அபிவிருத்தி சங்க செயலாளர் பொறியியலாளர் கமால் நிஷாத், சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன், பாலர் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம். ஜஹாங்கிர், ஈ.பி.எஸ்.ஐ. இணைப்பாளரும் ஆசிரிய ஆலோசகருமான எஸ்.எம். எம். அன்ஸார் ஆகியோர் நிகழ்வில் அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இம்முறை மற்றும் இதர பாடசாலை அதிபர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பாடசாலையில் பல வருட காலமாக நடை பெறாமல் இருந்த இந்த இல்ல விளையாட்டுப்போட்டியானது இம்முறை அதிபர் யூ.எல். நஸார் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது